சம்பர், 1995

ஸப்தகிரி

விலை ரூ. 2/-



திருமலை திருப்பதி தேவஸ்தான சமய மாத இதழ்

சதமக மணிநீலா சாரு கல்ஹார ஹஸ்தா

ஸ்தநபர நமிதாங்கீ ஸாந்த்ர வாத்ஸல்ய ஸிந்து: ।

அளகவிநிஹிதாபி: ஸ்ரக்பி ராக்ருஷ்ட நாதா

விலஸது ஹ்ருதி கோதா விஷ்ணுசித்தாத்மஜா ந: ॥

இந்திர நீலமணிபோல் நீலநிறமுடையளாய், அழகிய செஙகழுநீரப் பூவை திருக்கையில கொண்டவளாய், கொஙகைகளின் சுமையால் வளைந்த திருமேனியுடையவளாய், மிகுதியான அனபுக்கடலாய் கூந்தலில சூட்டப் பட்ட திருமாலைகளால நாயகனை வசப்படுதநியவளான பெரியாழ்வாரின் மகளான கோதைபபிராட்டி நமது உள்ளத்தில் திகழவேண்டும்.

—ஸ்ரீகோதாஸ்துதி-28

✿✿✿✿✿✿✿✿✿✿

ஸப்தகிரி

டிசம்பர் 1995

தனிப்பிரதி ரூ. 2 — மலர் 26

வருடச்சந்தா ரூ. 24 — இதழ் 7

சிறப்பாசிரியர் :
திரு. என். ரமேஷ்குமார், ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித்தலைவர,
தி.தி.தேவஸ்தானம்,
திருப்பதி.

ஆசிரியர்:
திரு. என்.எஸ். ராமமூர்த்தி, எம்.ஏ,

அச்சிடுபவர்:
திரு. பி. மோகன்ராவ்,
மேலாளர்,
தி.தி.தேவஸ்தான அச்சகம்,
திருப்பதி.

பிரதிகளுக்கு:
EDITOR,
"Sapthagiri"
T.T.D., Tirupati.

உள்ளுறை

	பககம்
அரிபஜனைக் கீரத்தனை ...	7
ஆழ்வாரகள திருவுளளம் ...	11
மாரகழி வழிபாடு ...	13
பரகாலனும அவர் செயத பனுவலகளும் ...	15
ஸஹஸ்ர நாமம ...	20
திருசசானூர பிரம்மோத்ஸவம் ...	22
முமுடசுபபடி ...	24
அனுமான - பெயரககாரணம ...	27
பகவத கீதை ...	30
திருபபாவை ...	33
வைணவ வழக்குச சொறகளும பொருள்களும ...	35
பொயகையாழ்வாரின புத்தமுது ...	39
சிரஞசீவியின சீதாராமர துதி ...	42

அட்டைப்பட விளக்கம்

முகப்பட்டை : கீதோபதேசம்
--சிததிரம: கே. ஜெகதீஷ்

முதல் உள்ளட்டை : திருமஙகையாழவார்

2-வது உள்ளட்டை : தொணடரடிபபொடியாழ்வார

பின்னட்டை : ஸ்ரீ ஆணடாள
--சிததிரம: கே. ஜெகதீஷ்

உள்ளே : ஸரவபூபால வாகனததில் வேஙகடவன ஸ்ரீ ஆஞசநேயர - திருப்பதி.

உங்களுடன்....

மனித வாழ்க்கையின் அடிப்படை வாழ்வியல் இலக்கணம் 'நம்பிக்கை' என்பதேயாகும். இன்றைய பொழுது மகிழ்ச்சியாக அமைந்துவிட்டால், நாளை இதைவிட மகிழ்ச்சியுடன் இருந்திடவேண்டும் வேண்டும் என்றும், இன்றைய பொழுது கவலையாகக் கழிந்தால், நாளையாவது மகிழ்ச்சி அமைய வேண்டும் என்றும் நம்பிக்கையுடன் அன்றையப் பொழுதைக் கழிக்கிறான் மனிதன். இந்த தன் நம்பிக்கைக்கு ஓர் உத்தரவாதம் கிடைப்பதற்காக ஏதோ ஒன்றினை நாடுகின்றான். அதற்கு இயற்கை அவனுக்குத் துணையாக விளங்கியது. தனக்கெட்டாத உய ரத்தில் வானத்தில் தோன்றி மறையும், உயிர் வாழ வழிவகுக்கும், அச்சூரியனை வழிபட ஆரம்பித்தான். எதனையும் சாம்பலாக்கும் ஆற்றல்மிகு நெருப்பினைக் கண்டு அஞ்சி, அதன்பிறகு அதனையும் வழிபட்டான். இவ்வாறு ஐம்பூதங் களுக்கும் முக்கியத்துவம் தந்து அவற்றைத் தொழ ஆரம்பித்தான். அதனால் வாழ்க்கையில் மகிழ்ச்சியும், நம்பிக்கையினையும், அமைதியினையும் எதிர்பார்த்து வாழ்க்கையை பயனுள்ளதாக்கிக் கொண்டான். காலப்போக்கில் இவ் இயற்கைக் குப் பின்னால் ஏதோ ஒரு சக்தி இருப்பதைத் தன் தூய மெய்ஞான உணர்வின் மேம்பாட்டால் அறிய, அதுவே சமயங்கள் தோன்ற வழிவகுத்தது. தான் பெற்ற அந்த ஆத்மானுபவ இறையுணர்வை பிறரும் பெற்று உய்ந்திட, சமய வழிபாட்டிற்கு இறை உருவங்கள் உருவாக்கினான். மன ஒருமுனைப்பாட்டிற்கும், சீரிய சிந்தனை உருவாவதற்கும் அவ்வுருவங்களையே தஞ்சமாகக் கொண்டான். அதனாற்றான் மெய்ஞான உணர்வு வளர்ந்திடவும் வழிவகுக்கப்பட்டது. தான் கண்ட உருவமைதிகளுக்குப் பல தத்துவ விளக்கங்கள் தந்திட, அதுவே பல இந்து சமயங்கள் உருவாக வழிகோலப்பட்டது. அவற்றுள் வைணவ நெறி யானது, தனக்கே உரிய 'சரணாகதி' சீர்மை, 'புருஷாகாரப் புதுமை', 'அடியார் மேன்மை' போன்ற தனிச்சிறப்புகளைக் கொண்டு குன்றின்மேல் இட்ட விளக்காகத் திகழ்கின்றது.

இத்தகு பெருமைமிகு 'வைணவ' நெறியின் எழுச்சிக்கும் அன்றும், இன்றும் இனி என்றும் ஓர் ஊன்றுகோலாக - தூண்டுகோலாக, திருமலைக்கோயிலானது ஆண்டாண்டு காலமாக விளங்கிவருவது நாடறிந்த செய்தியாகும். இன்னின்ன மாதங்களில், இதுபோன்ற நிகழ்ச்சிகளின் போது திருமலையானது யாத்திரி கர்களின் வருகையால் நிரம்பிவழியும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கடந்த ஒருசில ஆண்டுகளாக, திருமலையானது இதுபோன்ற எதிர்பார்ப்புகளை யும் தாண்டி, நாளும் 'பிரம்மோத்ஸவ' வைபவமாகத் திகழ்ந்து வருவதை பெருகிவரும் திருமலை யாத்திரிகர்களின் வருகையால் கண்டறியலாம். இதற் குக்காரணம் திருமலை ஒரு பொழுது போக்குத்தலமாக மக்கள் கருதவில்லை என்று உறுதியாகக்கூறலாம். ஏனெனின் திருமலையைவிட இயற்கைச்சூழலும், பொழுதுபோக்கு அம்சங்களும் நிறைந்த இடங்கள் இம்மண்ணில் நிறைய உண்டு. உண்மைக் காரணம் தனி மனித பிரச்சனைகளும், சமூகச் சூழ்நிலையுமே என்று துணிந்துகூறலாம். இன்றைய நிலையில் தனி மனித மற்றும் குடும்ப அமைதிக்காகவுமே இந்துவானவன் இறைவனை நாடுகின்றான். இவ்வமைதியை கோயில் நிகழ்ச்சிகளிலும் கொண்டாடும் பண்டிகைகளிலும் எதிர்பார்க்கின்றான். இத்தனிமனித அமைதியே உலக அமைதிக்கு வழி அமைத்திடும். இவ்வகை யில் நாடெங்கிலிருந்தும் இன, இட, மொழி கடந்து யாத்திரிகப்பொதுமக்களை

வெகுவாகக் கவரும் திருத்தலங்களில் முதன்மைப்பெற்று விளங்குவது திருமலை என்பது உலகறிந்ததே. ஆண்டுதோறும் 'பிரம்மோத்ஸவ' திருநாட்களின் போது ஆயிரக்கணக்கில் பக்தர்கள் திருமலையில் கூடுவது என்பதும் நாடறிந்ததே. ஆனால் ஆண்டின் துவக்கநாளான ஜனவரி மாதத்து முதல்நாளன்று கோயில் களுக்குச் செல்வது என்பது கட்டாயமாக நடைபெறும் ஒரு சமய நிகழ்ச்சியாக விளங்கிடும் இச்சூழ்நிலையில் 'திருமலை'யும் இந்நாளின் போது விழாக்கோலம் பூணுவது தவிர்க்கமுடியாத ஒரு நிகழ்ச்சியாக அமைந்துவருகிறது. 'தமிழ்ப் புத்தாண்டுநாள்', 'யுகாதி' என்று ஆண்டுத் துவக்கத்தினைப் பல்வேறு மாநிலங்கள் பல்வேறு பெயர்களில் கொண்டாடிவரும்போது, ஜனவரி முதல் நாளுக்கு இந்து சமயம் எந்தவித முக்யத்துவமும் தராவிட்டாலும், இந்துக்களிடையே இந்நாள் அவர்களையும் அறியாமல் ஒரு சிறப்பான நாளாக அமைந்துவிட்டது. ஆனால் அந்நாளே இன்றைய இந்திய வாழ்க்கைச்சூழலில், இந்துக்களை இணைத்திடும் ஓர் ஒருமைப்பாட்டு நாளாக மறைமுகமாக விளங்கி வருகிறது. அந்த வகையில் மலர்மங்கை மாதவன் அருள்பாலித்திடும் திருமலையானது தனக்கென ஒரு இடத் தையும், சிறப்பையும் பெற்று, இந்து சமய ஒருமைப்பாட்டு உணர்வினை மேலும் தழைத்தோங்கிடும் வகையில் தன் பங்கினைப் பெரிதே வகித்து வருகின்றது. மேலும் இவ்வாண்டு ஜனவரி முதல்நாளன்று, 'வைகுண்ட ஏகாதசி' எனும் திருநாளும் வந்தமைவதால், திருமலைக்கு வரும் யாத்திரிகர்களின் வருகை அதிக மாகவே எதிர்பார்க்கப்படுகிறது. அண்மையில் வெற்றிகரமாக நடந்து முடிந்திட்ட திருமலை பிரம்மோத்ஸவத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளைப் போன்றே இதுபோதும் தி.தி. தேவஸ்தானம் செய்துள்ளது. ஆண்டு ஆரம்பநாளன்று ஏழுமலையானைத் தரிசித்து, இனி முதற்கொண்டு நல்ல எதிர்காலம் அமைய வேண்டும் என்றும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் திகழ்ந்திட வேண்டும் என்றும், இந்நாள் போன்று இனி எந்நாளும் இறையருள் கிடைத்திடவேண்டும் என்றும் பலவாறு எண்ண அலைகளை மனதிலும், சிந்தனையிலும் தேக்கிக் கொண்டு, ஏழுமலையானின் அருட்பார்வையினை ஒருசில வினாடிகள் பெற்றிட, திருமலையானின் திருமேனியினை ஒருசில வினாடிகள் கண்டு களித்திட, திரும லையில் வளைந்து வரும் வரிசைகளில் குடும்பத்துடனும், நண்பர்களுடனும் பல மணிநேரங்கள் கால் கடுக்கப் பனிமழையில் நனைந்து நின்று கோயிலுக்கு ஊர்ந்துசெல்லும் யாத்திரிகப்பொதுமக்களை மனதிற்கொண்டு, அவர்களுக்கு உத விடும் வகையில் இலவச உணவு, தேநீர், குழந்தைகளுக்குப்பால், மருத்துவம் என்று பல்வேறு வசதிகளை தி.தி. தேவஸ்தானம் ஏற்பாடு செய்துள்ளது. தேவஸ்தான மேலாண்மை தன்னளவில் எல்லாவித முயற்சிகளை மேற்கொண்டாலும், அவற் றின் வெற்றி யாத்திரிகர்களின் ஒத்துழைப்பினைப் பொறுத்தே அமைந்துள்ளது. திருமலைக்கு இதுபோது வருகைபுரியும் பக்தர்களில் ஒருசிலர், ஏன், பலரும் தங்கு வசதிகள், தலைமுடி மழித்தல், தரிசனம், பேருந்துவசதி போன்ற விஷயங்களில் பல இன்னல்களை, ஏமாற்றங்களை எதிர்கொள்ளலாம். ஆனால் திருமலைக்கு வரும் ஒவ்வொரு யாத்திரிகரையும் மனதிற்கொண்டே தி.தி. தேவஸ்தானம் நேர்மையுடன் தன் முழு ஆற்றலை செயற்படுத்துகின்றது. ஆகவே 'இறை தரிசனமே இறுதிநோக்கம்' என்பதை மனதிற்கொண்டு, இவ் இடர்ப்பாடுகளை மன்னித்து, தேவஸ்தான மேலாண்மைக்கு முழு ஒத்துழைப்பினை வழங்கிடுமாறு, யாத்திரிகர்களுக்குத் தன் புத்தாண்டு வாழ்த்துக்களைக் கூறிக்கொண்டு, திருமலை பக்தர்களை இருகரம் கொண்டு விண்ணப்பித்து வரவேற்கின்றது.

செய்திச்சுருக்கம்

அண்மையில் திருமலையில் கூடிய தி.தி. தேவஸ்தான பொறுப்பாணமைககுழுக கூடடத்தில தீரமானிக்கபபட சில முகய முடிவுகள் பினவருமாறு.

திருப்பதியை அடுத்துள்ள கொல்லப்பலலி எனும் கிராமததிலுள்ள ஆநதிரமாநில இந்து சமயம மறறும அறநிலையத்துறையினரின் சுமார் 66 ஏக்கர நிலததினை விலைக்கு வாஙகி, அவ் இடததினை தேவஸதான ஊழியரகளுக்கான வீட்டுமனைகளுககாகவும், தேவஸ்தானத்தாரின பாலபணணை விரிவாக்கத்திறகும பயன்படுததுவதெனறு தி.தி. தேவஸதானம முடிவு செய்துள்ளது.

* * *

திருமலையில் சுமார ரூ. 20 இலடசம் செலவில 'இசை ஊறறுக்கள்' இரணடு அமைக்கப்படும.

* * *

திருமலைககோயில் பிரஸாதமான லடடுகளின தயாரிபபனை அதிகபபடுததும வகையில கோயில அரங்கிறகுள உள்ள சமையலகூடததினை நவீனமாக்கும வகையில வழிமுறைகள பல மேறகொளளபபடடுளளன. ஒரு குறிபபிடட கால அளவுககுள செல்லுபடியாகும விததத்தில் 'கணிப்பொறி' மூலமாக லட்டு டோககன விறபனை மேறகொளளபபடும. இதனால் 'லட்டு' பிரஸாதம கறுபபு சந்தையில் விறகபபடுவது தடுக்கப்படும்.

* * *

வேதப்பயிற்சி மேற்கொள்ளும் இயக்கங்களுககு உதவிடும வகையில், செனனை அஹோபில மடத்திற்கு ரூ. 25,000/-மும், மைசூர தததபீடததிற்கு ரூ. 1 இலடசமும நனகொடையாக வழஙகபபடடுளளது.

* * *

திருமலையில் நாள் ஒன்றிற்கு சுமார் பதினைந்தாயிரம பக்தர்களுக்கு அனனதானம் வழங்கிடும வகையில் தி.தி. தேவஸ்தானத்தாரால் நடததபபட்டுவரும் "ஸ்ரீவேஙகடேஸவரா அனனதானதிடடத்தினை" மேலும பயனுளளதாக செயலபடும வகையில ரூ. 60 இலடசம செலவில சமையல கூடமும, உணவருந்தும இடமும நவீனமாறறங்களுடன மேலும் விரிவாக்கபபடும்

* * *

உத்திரபிரதேசம் ரிஷிகேஷத்தில் உள்ள கோயில்கள், தங்குமிடம் தவிர, தேவஸ்தானத்திற்குச் சொந்தமான இரண்டு கட்டிடத்தொகுதிகளை ஏலத்தில் விறபதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது அலிபிரியிலிருந்து காணும் வகையில் திருமலை காலிகோபுரத்திறகுமேலே உளள 'சங்கு சக்கர திருமண்' விளக்கு அமைபபு போல, ரூ. 12.5 இலடசம் செலவில சித்தூர சாலையிலிருந்து காணும் வகையில சந்திரகிரி வழியாக திருமலை செல்லும் மலை வழிசசாலையில் மற்றொரு 'சங்கு சக்ர திருமண்' விளக்கு ஒன்று அமைக்கப்படும.

* * *

திருமலையில் உயரமான அழகுமிகு மணிக்கூண்டு ஒன்று ரூ. 5.65 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

* * *

அண்மையில் சென்னை தி.நகரில் உள்ள தி.தி. தேவஸ்தான தகவலறிவிப்பு மையத்தில் ஸ்ரீவிஷ்ணு ஸகஸ்ரநாம பாராயண நிகழ்ச்சி நடைபெற்றபோது.

திருப்பதியிலுள்ள அரசு ருயா மருததுவமனையில் காது, மூக்கு, தொணடை சிகிசசைப்பி ரிவுககுப் பயனபடும் வகையில ரூ. 1.5 இலட்சம பெறுமான நவீன கருவிகளை வாங்கிதத ருவதெனறு குழு தீரமானிததுள ளது.

* * *

தி.தி. தேவஸதான அரச கத்தில் பணிபுரியும் பணியா ளரகளின ஓய்வுககாலம் ஆந திர அரசு அச்சக விதிப்படி 58லிருந்து 60 ஆக நீட்டிபப தென்று குழு முடிவுசெயதுள ளது.

* * *

திருப்பதியை அடுததுள்ள திருச்சானூரிலுள்ள தி.தி. தேவஸதானததாரின ஸ்ரீபத் மாவதிதாயார திருக்கோயிலில பகதரகள பஙகேறகும வகையில ரூ. 500/- செலுத்தி நடக்கபப டும 'கலயாணோதஸவம்' எனும ஆரஜித சேவை ஒனறு விரை வில் நடத்தப்படும.

தி.தி. தேவஸதானத் தாரால மேறகொள்ளபபட்டு வரும "ஸ்ரீவேஙகடேஸவரா காடு மேம்பாட்டுததிட்டத திற'கென ரூ. 1000/- நன கொடை வழஙகும பகதர களுக்கு, வருடததில் ஒரு முறை 5 நபரகளுககு 'சிறப்பு நுழைவு தரிசன வசதி' செயது தரபபடும்.

திருமலையில தி. தி. தேவஸ்தானததாரால் மேற கொளளபபட்டு வரும 'ஸ்ரீவேஙகடேஸவரா நிதய லட்டுதான திட்டததி'றகு நனகொடை வழஙகிடும் பக தரகளுககு வருடததில ஒரு நாள மட்டும அவரகளைச சாரந்த மூனறு நபரகளுக்கு இலவச தங்குவசதியும், தரி சன வசதியும் செய்துதரப் படும.

★★★★★★★★★★★

திருப்பதியிலிருந்து
இரயில் கால நேர விவரங்கள்

அகல இருப்புப்பாதை

இரயில் எண்.	புறப்படும நேரம	சேரும் இடம்	இரயில பெயர்
475	23-30	காகினாடா	காகினாடா பிரயாணி வண்டி
217	22-00	மைசூர்	மைசூர பிரயாணி வண்டி
7425	18-30	செகநதிராபாத	நாராயணாதரி விரைவு வணடி
7487	19-00	விசாகபபட்டினம்	திருமலா விரைவு வண்டி
7430	15-30	ஹைதராபாத்	ராயலசீமா விரைவு வணடி
6054	10-05	சென்னை	ஸபதகிரி விரைவு வணடி
559	14-15	ஓஙகோல	ஓஙகோல் பிரயாணி வணடி
7489	13-45	வாரணாஸி	வாரணாஸி விரைவு வண்டி (செவவாயக்கிழமை)
7490	13-45	கொச்சி	கொச்சின விரைவு வணடி (ஞாயிறறுககிழமை)
7491	13-45	வாரணாசி	வாரணாஸி விரைவு வணடி (புதன/வெள்ளிக்கிழமை)
8480	9-45	பூரி	பூரி விரைவு வணடி
6058	17-30	செனனை	ஸப்தகிரி விரைவு வணடி
6208	6-30	ஹைதராபாத	கடபபா விரைவு வணடி
529	6-55	கூடூர	கூடூர் பிரயாணி வணடி
7405	5-30	ஹைதராபாத	கிருஷ்ணா விரைவு வணடி
196	4-05	அரககோணம	அரககோணம பிரயாணி வண்டி

குறுகிய இருப்புப்பாதை

இரயில் எண்.	புறப்படும நேரம	சேரும் இடம்	இரயில பெயர்
6799	15-40	மதுரை	மீனாட்சி விரைவு வண்டி
247	6-00	குணட்டக்கல்	குணடட்க்கல் பிரயாணி வணடி
157	10-30	காட்பாடி	காட்பாடி பிரயாணி வணடி
7598	14-40	மெஹபூபநகர	வெஙகடாதரி விரைவு வண்டி
187	17-30	காடபாடி	காட்பாடி பிரயாணி வணடி
191	7-00	காடபாடி	காட்பாடி பிரயாணி வண்டி
287	21-45	குண்டட்ககல	குணட்டககல பிரயாணி வண்டி
643	8-45	காட்பாடி	காடபாடி பிரயாணி வண்டி

அரிபஜனைக் கீர்த்தனை

அமைப்பும் விளக்கமும்

டாக்டர் கோவி. நரசிம்மன் - அனந்தபூர்.

சாதாரண மக்களுக்கு அறிவைபபுகட்டும் நோககில ஓசை நயததால உணரசசியைத தட்டி எழுபபித் தன் எணணததையும அதாவது பாடுவோன எணணத்தையும இசையையும கேட்போன பருகச செய்வது கீர்த்தனை ஆகும். அன்றையநாள தொட்டு இனறைய நாளவரை தோனறிய கீர்ததனை நூல்கள் அனைததும் பின்வருவனவறறுள ஏதேனும் ஒன்றைப் பாடுபொருளாககக் கொணடனவாகும்.

1. கடவுளைப பற்றியன
2. தனி மனிதனைப் பற்றியன
3. காவியஙகளாக வருவன.
4. இயற்கையைப் பறறியன.
5. நீதி புகட்ட தோன்றியன
6. தமிழின் சிறப்பைப் பாடுவன.

முதறபிரிவில் கடவுளின சிறப்பை எடுதது ரைககும் கீர்த்தனைகளும் இறைவனை இறைஞ்சி வேண்டும் கீரததனைகளும் இதில் அடஙகும். காட்டாக, முதது ததாண்டவர் கீர்ததனை, அரிபஜனை கீரத்தனை, ஸ்ரீபண்டரிநாதர் பஜனைக் கீர்த்தனை ஆகியனவற்றைக கூறலாம.

தனிசசெல்வர்களை, அரசரகளை, உயர்நத பகதனைப் புகழநது பாடும கீரத்தனைகள இரணடாம் பிரிவில அடஙகும். சானறாக, கோபால கிருஷ்ண பாரதியார இயறறிய நநதனார சரிததிரக் கீரததனையைக கூறலாம்.

பாரத இராமாயண ஆகிய புராண இதிகாச கதைகளை அடிப்படையாகக கொண்டு நாடக வடிவில தோனறிய காவியக் கீர்ததனைகள மூனறாம் பிரிவில் அடங்கும். (எ-டு) அருணசலகக் கவிராயர இயறறிய இராம நாடகக் கீரத்தனை.

கீர்த்தனைகள் தோன்றிய காலத்தில் இயற்கையைப் பெரிதும வருணித்துப்பாடும் பாடலகள மிகுதியாகக் காணப்படவில்லை. ஆனால இருபதாம நூற்றாண்டின் துவக்கததில தோனறிய சில நூல்களுள் பூ, மழை, மேகம் முதலியவற்றை விளக்கும் இயறகை வருணனைகள் அமைந்த கீர்த்தனைகள் மிகுந்த இடம்பெற்றுள்ளன.

சமண, பௌத்த மததததாககுதலகளினாலும திருககுறள நாலடியார முதலிய நீதிநூல்க ளின் செலவாககினாலும பல நீதி சார்நத கீரததனை நூலகள வெளிவநதன. காட்டாக, மாயூரம வேதநாயகம பிளளை இயற்றிய சர்வ சமய சமரசச கீரததனையைக கூறலாம்.

தமிழின மீது கொண்டுள்ள ஆர்வததின காரணமாகவும் தமிழின சிறப்பை வெளிபப டுத்தவும் வேணடி தோனறிய கீரததனைகள ஆறும பிரிவில அடஙகும.

அததஙகி - திருவேஙகட தாததாசாரியர திருவடி சமபநதி ஸ்ரீபராஙகுசதாசர இயற றிய அரிபஜனைக கீரததனை எனும் நூல் கடவுளைப பாடுபொருளாகக கொண்ட முதற பிரிவில் அடஙகும இநநூல ஆசிரியரின பிறபபு, இறப்பு, காலம பற்றிய கருததுககளை அறிய இடமிலலை. இநநூலில இடம்பெற றுள்ள கீரததனை விவரம பினவருமாறு.

உடையவர தோத்திரம்	1
பொதுக்கீர்த்தனைகள	32
நூதனமானக் கீரததனைகள்	10
சமஸ்கிருத கீர்த்தனைகள	2
இதரக கீரததனைகள்	66
மங்களம்	1
	112

இந்நூலினை வெளியிட்டோர மொத்தம 112 கீர்ததனைகள் உளதாகக் கூறினும் உண மையில் 111 கீர்த்தனைகள மட்டுமே உள்ளன. உடையவர் தோத்திரத்தையும் சேர்ப்போமா யின் மொத்தம் 112 கீரததனைகள் ஆகும்.

கீர்ததனையை உயரத்துவது இராகமும தாளமுமாகும். அவை கருப்பொருளுககேறப வும் சுவைக்கேற்பவும் காலததிறகு ஏற்பவும் மாறி மாறி வரும்.

கருப்பொருள்

துதிப்பாடல்	:	கல்யாணி, பரசு, தர்பார், நாட்டை, மத்தியமாவதி, சாவேரி
நூல் தொடக்கம்	:	யமுனை, பிலகரி, ஆனந்த பைரவி, பந்துவராளி, கல்யாணி
மஙகலபபாடல	:	நாதநாமக்கிரியை, தன்யாசி, கேதாரம், இந்துஸ்தான், காபி பைரவி, சுருட்டி, சௌராஷ்டிரம்
இறைவனைத் துதித்தல்	:	புன்னாகவராளி, சகானா, சுருட்டி, கலயாணி, பைரவி அபூர்வம், நாதநாமக்கிரியை
முறையிடல்	:	ஆரபி, சுருட்டி
கடவுள் பெருமை	:	சங்கராபரணம்
மனத்தூது	:	சங்கராபரணம்
துன்பம்	:	முகாரி
போதனை	:	ஸ்ரீராகம்
கதைகூற	:	பூரி கல்யாணி, நாதநாமககிரியை
தன்னனுபவம்	:	யமுனை
இன்பப்பரவசம்	:	செஞ்சுருட்டி
உபதேசம்	:	காம்போதி

2. சுவை

காமம்	:	காமஸ
நகை	:	வஸநதா
சினம்	:	அடாணு, ஆரபி
துன்பம்	:	முகாரி
துயர்	:	புன்னாகவராளி
இரக்கம	:	சகானா
வீரம்	:	பேகடா, பிலகரி, தேவகாநதாரி
வியப்பு	:	சாரஙகா
அன்பு	:	நீலாம்பரி, ஆனநதபைரவி, யதுகுலகாம்போதி

3. காலம்

விடியற்காலை	:	பூபாளம், மலயமாருதம், மாயமாளவ கௌளம்
காலை	:	பிலகரி, கேதாரம், ஹம்சதவனி
முற்பகல்	:	தன்யாசி, அசாவேரி
நண்பகல்	:	மத்யமாவதி, ஸ்ரீராகம், சுருட்டி
பிற்பகல்	:	பேகடா, முகாரி, தர்பார்
மாலை (முற்பகுதி)	:	வஸந்த, நாட்டகுறிசசி, பூர்வகல்யாணி
மாலை (பிற்பகுதி)	:	கலயாணி, ஷண்முகப்பிரியா, லதாங்கி, சாரங்கம்
இரவு	:	பிகாக், அமிரதகல்யாணி, நீலாம்பரி ஆனந்த பைரவி, யதுகுல காம்போதி
எல்லாக் காலத்திற்கும் உரியது	:	பைரவி, சங்கராபரணம், ஆரபி, காம்போதி, கரகரப்பிரியா.

அரிபஜனைக கீர்ததனையில் 29 வகை இராகஙகளும், 9 வகை தாளங்களும் இடம பெற்றுள்ளன. (ஆகிரி-1, அபுருபம்- 2, அசாவேரி - 5 எதுகுல காம்போதி-1, கரகரபபிரியை-2, கலயாணி-4, காபி-1, காமசு-2, காம

போதி-3, கேதாள கௌளம்-2, சஹானா-2, சங்கராபரணம்-6, சாவேரி-7, செஞ்சுருட்டி-3, சௌராஷ்டிரம்-1, தன்யாசி-3, துவஜாவந்தி-1, நாதநாமக்கிரியை-21, நாட்டை-2, நீலாமபரி-1, புன்னாகவராளி-6, பைரவி-4, மத்யமாவதி-4, மாஞ்சி-1, முகாரி-15, (தாளங்கள்: அட-26, அடதாளசாப்பு-3, ஆதி-62, ஏக-2, சாப்பு-5, மிசுரம்-1, திரிபுடை-2, ரூபகம்-8, ஜம்பை-2,)

அரிபஜனைக் கீர்த்தனையில் மேற்குறிப்பிட்ட எவ்வடிப்படையில் இராகம் அமைக்கப்பட்டுள்ளது என அறியவியலவில்லை. புள்ளியில் நோக்கில் நாதநாமக்கிரியை 21 இடங்களிலும், முகாரி 15 இடங்களிலும, சாவேரி 7 இடங்களிலும, புன்னாகவராளி, பியாகு, சங்கராபரணம ஆகிய இராகங்கள் ஆறு இடங்களிலும் அசாவேரி ஐநது இடங்களிலும் வந்துள்ளன. எஞ்சியன மிகசசில இடங்களில அமைந்துள்ளன. இநநூலுள் இடம்பெற்ற இராகங்களுள் ஆதிதாளம் மிக மிகுதியான இடங்களில அதாவது 62 இடங்களிலும், அடதாளம் 26 இடங்களிலும், ரூபகம எட்டு இடங்களிலும சாரபு ஐநது இடங்களிலும் இடம் பெறறுளளன. எஞ்சியன சில இடங்களில் வநதுள்ளன. நாதநாகமககிரியை இராகமும் ஆதிதாளமும மிக எளிமையாக இருநததால் இவறறைக கீர்ததனை ஆசிரியரகள் மிகப் பரவலாகப் பயன்படுத்தியுளளனர.

‘பராங்குசதாசர்’ வாழ்க்கையைப பறறி ஒரு செவிவழிக் கதை இடமபெறுகிறது. பராங்குசன் ஒரு குடியானவன். நாள்தோறும் வயலில் உழைத்து மாலைப்போதில் ஸ்ரீமந் நாராயணனின் திருநாமங்களை உச்சரிததுத தன் கடமையில் ஈடுபட்டு வாழுவாராயினார். அவர் ஊரின் அருகே நாராயணனைத் தன் குலத் தெய்வமாகக் கொண்டு அவ் இலக்குமி நாதனைத் தானே கண்டதாக ஊரெல்லாம் பறைசாற்றும ஒரு வைணவ பக்தர் இருந்தார். அவர மிகுந்த ஆணவத்துடன் தன்னைத் தவிர வேறொருவர் சிறந்த திருமால் பக்தராக இருக்கமுடியாது என எண்ணினாரர. ஒருபோது பரங்குசன வாழும் ஊரிற்கு வநது கொண்டிருந்த ஓர் உழவனை அழைத்துத் தன் பெருமையை விரித்துக் கூறினார். அதைக்கேட்ட உழவன், ‘ஐய, நீர் என்ன பெரிய திருமால் பக்தர்? தங்களைவிட உயர்ந்தவர் எம்மூரில உள்ளார். அவர் பெயர் பராங்குசன்’ எனக் கூறினார். வெகுண்ட அப்பக்தர் நேரே பராங்குசனின் இல்லம் சென்று அவரைக் கண்டு கடவுளைக் காட்டுமாறு கட்டளையிட்டார். பராங்குசன் தனக்கு ஒன்றும் தெரியாதென்றும் அவன் திருநாமத்தைப் பாடுதல் என் பணி எனவும் கூறினார். அதைக்கேட்ட அப்பக்தர் பராங்குசனைக் கடுமையாகத் திட்டி, அவரை மரத்தில் சேர்த்துக் கட்டிவிட்டுச் சூட்டுக்கோலால் பட்டைப் பட்டையாகச் சூடு வைத்தார். அச்சூட்டின் வலிபொறுக்கலாற்றாது திருமாலை எண்ணிக் கீர்த்தனைகளைப் பாடினான் பராங்குசன. அன்றுமுதல் திருமாலின் தாசரானார்.

சிறிது நேரத்தில் அவ்வைணவப் பக்தரின் ஊரிலிருந்து அவர் சீடன் ஓடிவந்து, அப்பக்தரின் மனைவியின் உடலில் திடீரென்று சூட்டுக்காயங்கள் தோன்றியதாகவும் அதைத் தாங்கவியலாது அவள் துடிதுடிப்பதாகவும் கூறினார். உடனே அப்பக்தர் பராங்குசதாசருக்குத் தான் இழைத்த கொடுமையை எம்பெருமானார் என் மனைவிக்குக் கொடுத்து விட்டார் என வருந்தி பராங்குசதாசரின் காலைப் பற்றித் தனனை மன்னிக்கும்படி வேண்டினார். அவ்வாறே மன்னிக்க அவர் மனைவியின் துன்பம் நீங்க, பின் அவரே பராங்குசனின் சீடனாக மாறினான். அவருடைய கீர்த்தனைகளில் இக்குறிப்பு காணப்படுகின்றது.

“மாயப்பிரபஞ்சத்தை மறந்துன்னைக் காண
உபாயமறிவது நானெப்போ
காயத்தைப் போக்கியென் கர்த்தனே யென்னுடன்
கலந்து கொள்வதினி யெப்போ”

“எவரென்ன வைதாலு மெதிர்த்துப் பேசாமல் நான்
மவுனமாயிருப்பது எப்போ
ரவிகுலசந்திர பராங்குசதாசனை
ரக்ஷிப்பதினி நீரெப்போ” (அ.ப.கீ.21

பராங்குசரின் கீர்த்தனைகள இனிமையும் எளிமையும் வாய்ந்தன. காட்டாக, “அரியே உனையே நான் நம்பினேன். சில பக்தர்களைப் போனறு எல்லா இறைவனையும் வணங்கும் வழக்கமில்லாதவன். அப்படிப்பட்ட என்னை இன்னும் ஆட்கொள மறுப்பதற்குக் காரணம் யாது?

என தலைவனே! இராமவதாரத்தில் வழியிற் கிடந்த கல்லைப் பெண்ணாக மாற்

றியவனே. மழையில் நனைநது வெயிலில் காய்ந்து கிடந்த கல்லை பெண்ணாக மாற்றியவனே. இத்தகைய உனக்கு, என் போன்ற வைணவ பக்தர்களுக்கு உன் கருணை கிடைக்கவில்லையே. தேவர்கள் வேண்ட கூர்மவதாரம் எடுத்து மலையைச் சுமநதவனே, நான செய்த பிழைகளைப் பொறுதது என்னை ஆட்கொள்ளககூடாதா?"

பல்லவி

உனை நம்பினேனையா ஹரியே-இனி

அநுபல்லவி

எனையாளத் தடை செய்வதே னெந்தன் துரையே (உனை)

சரணங்கள

சிலையைப் பெண்ணாக்கிய பாதா
சிதமென் மீதினிற் சற்றே இரங்காதா
மலையைச் சுமந்த ப்ரகயாதா என்னை
மன்னித் தருளும்படியார்க்கருள் போதா (உனை)

உத்தமனே கனராமா - எந்தன்
ஊழ்வினைகளைத தீருமே பரந்தாமா
குற்றமென் மேலெனணலாமா - இந்தக்
கொடுமைக்கென் செயவேன் கோவிந்தனாமா (உனை)

தீரனே னானுனககாளா - யாவ
தெப்போதரியே ஓ சீதாமணாளா
கோரிக்கைத் தாமலர்த்தாளா - பராங்
குசதாசன் வரமதைக் கொடுக்கும் தயாளா (உனை)

நாலாயிர திவ்யப்பரபந்தத்தை பதிப்பித்தவர்கள்

ஆழ்வார்கள் அருளிய திவயப்பிரபந்தம் சிறநத இலக்கிய நூலாக மதிககப்படுகின்றது. இதை முதன் முதலில் அச்சுககுக் கொணர்ந்தவர் திருப்புட்குழி கூர்மாசாரயர். எட்டுசசுவடியிலிருநது நாலாயிரத்தைப பகுதிபகுதியாக 1856-ஆம் ஆண்டு முதல் 1859-ஆம் ஆண்டு வரை பதிப்பிதது முடித்த சிறப்பு இவருக்குண்டு.

1865-இல் திவ்யப்ரபநதங்கள் அனைத்தையும் வைப்பு முறைபபடி அமைத்து ஒரே பதிப்பாக அச்சிட்டவர் அப்பாவு முதலியார். இவர் தறகால இராக தாளக குறிப்புகளையும தம் பதிப்பில சேரத்துள்ளார்.

1873-ல் திருவல்லிககேணி அரஙகாசசாரி ஐயஙகாரும், 1908-ல கா.வெ. திருககசசி நம்பிதாசரும, 1917-ல் சேட்லூர கிருஷ்ணமாசசாரி என்பவரும, சென்னை டி.சி. பார்ததசாரதி அய்யஙகார் 1939-ஆம் ஆண்டிலும, 1943-ல மயிலை மாதவதாசன என்பவரும் முழுமையாகப் பதிப்பிதது வெளியிட்ட பெருமைககுரியவர்கள.

திருவல்லிக்கேணி ஆர. கேசவ ஐயங்கார 1951-ல் முதலாயிரததை மட்டும் தனியே பதிப பித்து வெளியிட்டார். ராஜம் எனபவர் வையாபுரிப்பிள்ளையின துணையோடு முதலாயிரததை 1955-ல பதிப்பித்தார். பினனர ஏனைய பகுதிகளையும் 1956 -ல் சிறநத அறிஞரகளைக கொணடு வெளியிட்டார.

1927-இல் ப்ரதிவாதி பயஙகரம அண்ணஙகராச்சாரியர் திவயபரபநதத்தை பதிப்பித்தார. நாலாயிரததின் மூலத்தைத தெலுங்கு, இந்தி ஆகிய எழுததுககளின வரிவடிவில் பதிப்பிதத பெருமைக்குரியவர இவர். தெலுங்கிலும், இந்தியிலும் கவிதை வடிவில் நாலாயிரமும இவரால மொழிமாற்றம் செய்யபபட்டது.

1973-ல் கி. வேங்கடஸ்வாமி ரெட்டியார் திவயபரபந்ததநினைச செமமையாகப பதிப்பிததார. 'லிப்கோ' வத்ஸன் எனபவர் 1984-ல் இருபகுதிகளாக பதிப்பித்துள்ளார.

தட்டை. கிருஷ்ணமாசசாரியார, காரப்பஙகாடு கோபாலாச்சாரியார, புததூர் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஆகியோர் சமீபத்தில் இந்நூலை பதிபபிதத சிறப்புக்குரியவர்கள.

தொகுப்பு : எஸ். சேதுராமன் - சென்னை.

உயிரின் தனமை உணர்வது. எதை உணர்வது? இனப துன்பங்களை உணர்வது; நல்லவை தீயவைகளை உணர்வது; நிலையான நிலையறறவரகளை உணர்வது. இந்த உணரவுத் தனமையைககொண்டே உயிரகள ஆறுவகைகளாகப் பிரிக்கபபட்டுளளன. புல் பூண்டு முதல மக்கள் தேவர் வரை. பகுத்தறிகினற மன உணர்வு உடைய மக்களா ஆறறிவினராகக கருதப் படுகினறனர.

ஆறறிவினரான மக்களும சிற்றறிவினர், பேரறிவினர எனறு பகுததுககூறப்படுகினறனர. தங்கள வாழ்க கையை இம்மை நுகர்சசிக்குரிய தாக நினைதது உண்டு உடுதது உடல இருக்கும் வரை 'கண்டதே காடசி - கொணடதே கொண்டு செலுத்தும் ஆறும் அழியாதவை. ஆனால் மக்கள் எப்படி உருவத்தால், நிறத்தால் உளளத்தால், மொழியால், இடத்தால் மாறுபட்டுள்ளனரோ அப்படியே அவர்களிடையே தோன்றிய ஞானியரின நெறிகளும் அவர்களுக்கு ஏற்ப மாறுபட்டுள்ளன. அவ்வளவே, நோக்கு மாறுபாடுடையன அல்ல.

எனவே உண்மை நெறியை-மெயநெறியை விளககும் சமயங்கள பலவாயின. அவைதம உளநோக்கம் - உயிர்ததன்மை இரகக உணரவும், அனபு வழியும், அழியா ஒரு பொருளிடததுக் கொள்ளும் இடையறு ஈடுபாடுமே ஆகும. இததகு சமயங்களுள் மிகப்பழமையான தாகக் கருதப்படுவது இந்து சமயம் என்று தொகுதியாகச் சுட் வனைப் போன்றே அழிவில்லாதது. உலகம் உயிர்களுக்காக இறைவனால் அருளப்படுவது. உயிரின் நோக்கம் அன்பு பூண்டு இறைவனை அடைவது. அவனுக்குத் தொண்டு - அடிமைசெய்வது, அத்தொண்டின் முதிர்ந்த நிலையே வீடு பேறு அல்லது மோட்சம என்பதாகும்.

உயிர்தோறறத்திற்குக் காரணமான ஆண் பெண் தத்துவம் கடவுளுக்குக் கற்பிக்கபபட்டுள்ளது. சிவபெருமான பொனனுருவினன். அவனிடபாகங் கொண்ட உமையாம பெண்மை கருமையானது. இதற்கு மாறுக திருமால் - நாராயணன் நிறம் கருமை. அவன் வலமார்பினில் இறையும் நீங்காது வாழ்கின்ற மங்கையாம் திருவின் நிறமோ பொன்மை. இதற்குப்

ஆழ்வார்கள் திருவுள்ளம்

வித்துவான். ரா. கண்ணன் - சென்னை

கோலம்' என்று வாழ்வோர் சிற்றறிவினர.

இந்த உடல இருக்கும் வரை வாழ்கின்ற வாழக்கை மட்டும் வாழ்வாகாது. இந்த உடல வீழ்நத பிறகும், இதனில வாழநது வநத உயிர மேறகொளள இருககிற மறு வாழவு ஒனறு உணடே அதைப் பற்றிச் சிநதிபபோர், அது எவ்வாறு அமைய வேண்டும் என்று முயலவோர பேரறிவினர - ஞானிகள.

இந்தப் பேரறிவினர் - மெய்யறிவினரான ஞானிகள் கண்ட உணமைகள அழியாதவை. உயிர் எப்படி அழியாத தனமையதோ அதே போன்று அவ்வுயிர் அடையவேணடிய நிலையும், அங்குக் டபபடும் ஒன்றாகும். இது ஆதிமுதல் இன்றுவரை ஏற்பட்ட வளரச்சியைக காட்டுவதாகவே உள்ளது. இம்மதததின பல்வேறு கிளைகள் அததுவைதம், துவைதம், விசிட்டாததுவைதம், சைவசித்தாநதம், சிததர நெறி முதலிய பலவாம்.

இவறறுள் இந்துக்களில் பெருமபாலோரால பினபறறப்படுவன சிவனை வழிபடும் சைவ சமயமும் நாராயணனை வணங்கும் வைணவ மதமுமாம.

இவவிரு மதஙகளும வெவ்வேறாகத தோன்றினாலும், அடிப்படைக்கொள்கைகளிலும, உருவ கறபனைகளிலும், வழிபாட்டு முறைகளிலும் உறவுடையனவாகவே தோனறுகினறன. இறைவன ஒருவன். உயிர் இறை பொருநத திருமாலுக்கு உமை தங்கை எனற முறையும் கற்பிககபபட்டுள்ளது. சிவன் திருமாலுக்குத் தனதுடம்பில் இடமளித்ததாகவும், திருமால் சிவனுக்கு உடம்பிலோர் கூறுகொடுத்ததாகவும் பேசப்படுகிறது. இதனை ஆழவாரகள அருளிச் செயலகளுள் பரக்கக் காணலாம்

"பிறை தங்கு சடையானை
வலத்தே வைத்துப்
பிரமனைத் தன் உந்தியிலே
தோற்றுவித்து"

"அவர் மகட்கும் அரற்கும்
கூறுகக் கொடுத்தருளும்
திருவுடம்பன்"

"குழல் நிற வண்ண நின் கூறு
கொண்ட தழல்நிற வண்ணன்"

வானார் மதிபொதியும் சடை
மழுவாளியொடு ஒருபால்,

தானாகிய தலைவன்"

"எங்களுக்கருள் செய்கின்ற ஈசனை
வாசவார் குழலாள் மலைமங்கைதன்
பங்கனை பங்கில் வைத்துகந்தான்
றன்னை"

என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்கின்றார்.

இதனை இன்னும் தெளிவாகப்,

பொன்திகழு மேனிப புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாயநெடுமாலும் - என்றும்
இருவரங்கத்தால திரிவரேலும், ஒருவன்
ஒருவனங்கத் தென்றும் உளன்"

என்று பொய்கையாழ்வார் பாடுகின்றார். இதனோடு அமையாது திருமால், சிவன இருவரது பெயர் உருவம், நிறம், தொழில ஊர்தி முதலியவைகளை ஒருசேரச சேரதது மிக அழகாக,

"அரன நாரணன் நாமம் ஆனவிடை புள்ளூரதி
உரைநூல மறையுறையும கோயில்- வரைநீர்
கருமம் அழிப்பளிப்புக் கையது வேல் நேமி,
உருவம் எரி கார்மேனி யொன்று"

"ஏற்றான் புள் ஊர்ந்தான் எயில் எரித்தான் மாரவிடந்தான்
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான் கூற்றொருபால
மங்கையான் பூமகளான் வார்சடையான, நீண்முடியான
கஙகையான் நீள் கழலான் காப்பு"

என்று இனிமையாக அருளிச செய்கின்றார்.

உயிரும் மனமும் எதனையாவது பற்றி நிற்கும் இயல்பின. அதனாற்றான் எல்லாவற்றினின்றும நீஙகவேண்டுமென்று உபதேசிக்கும் திருவள்ளுவர பெருமான் ஒன்றைமட்டும் பற்றவேண்டும என்கிறார். அது,

"பற்றுக பற்றற்றான பற்றினை, அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்பதாகும். உயிரும் மனமும் ஒருநிலையனவல்ல, அதனதன தன்மை - நிலைககு ஏறப பற்ற முயலும. அதனால்தான் திருமங்கையாழ்வார,

"பாருருவில் நீரெரிகால் விசும்புமாகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற,
ஏருருவில் மூவருமே என்ற நின்ற,
இமையவர் தந்திருவுரு வேறெண்ணும்போது,
ஓருருவம் பொனனுருவம ஒன்றுசெந்தீ
ஒன்று மாகடலுருவம் ஒத்துநின்ற
மூவுருவும கண்டபோது ஒன்றும் சோதி
முகில உருவம் எம்மடிகள உருவந்தானே"

என்ற திருப்பாசுரததில இறைவன் நிற்கின்ற நிலையெலாம உணரத்தி, வெவவேறு உயிர மனங்கள் பற்றுகின்ற உருவஙகளைப் 'பொனனுருவம் செந்தீ உருவம், மாகடல் உருவம்' என்று விளக்கியதோடு தமது யிரக்கு, மனததிற்கு, உகந்ததாகக் கொண்டது- தமக்குச சுவாமியாக அடிகளாகக் கொண்டது 'மாகடலுருவம்' என்றும், கருமை நிறமுள்ள 'முகில் உருவம் எமமடிகள் உருவம தானே' என்றும் உணரத்துகிறார். அதோடுநில்லாமல் ஓருருவத்தில் பழகி, உருகி, உணரந்து காணும போது மூவுருவம், "ஒன்றும சோதி" ஆதலையும் தெளிவு படுத்துகின்றார்.

கடவுள தன் ஞான சக்தியினாலேயே தனனுள அனைத்துலகும் நிற்குபடி இருதத தல "வியாபகத் தனமை". அந்த ஞான சகதியினாலேயே எலலாப் பொருள்களுள்ளும் நிறைந்து விளஙகுதல "அநதரயாமித தனமை" இவவாறு இறைவன் நீக்கமற நிறைகின்ற போது எநத உருவததில், எநதப் பொருளில, எநத சமயததில் அவனில்லை என்று பேச இயலும? இதனை,

"அறிகிலேன் தன்னுள் அனைத்துலகும் நிற்க,
நெறிமையால்தானும் அவற்றுள் நிற்கும் பிரான்"

என்று அழகாக அருமையாக அருளுகிறார நம்மாழ்வார, மேலும்,

"புகழுநல் லொருவனென்கோ
பொருவில சீர்ப் பூமியென்கோ,
திகழும தன்பரவை என்கோ
தீயென்கோ வாயுவென்கோ
நிகழும் ஆகாசம் என்கோ நீள்சுடர்
இரண்டும் என்கோ
இகழ்வில் இவ்வனைத்தும் என்கோ
கண்ணனைக் கூவுமாறே"

"ஒளிமணி வண்ண னெனகோ
ஒருவனென்று ஏத்தநின்ற
நளிரமதி சடையன் எனகோ
நான்முககடவுள என்கோ
அளிமகிழ்ந் துலகமெல்லாம் படைத்து
அவை ஏத்த நின்ற,
களிமலர்த் துளவன எம்மான் எம்மான
கண்ணனை மாயனையே"

என்று கண்ணனைப பற்றிச் சொலலும்முறை பூமி என் பேனோ; கடல எனபேனோ; தீ எனபேனோ; வாயு எனபேனோ; ஆகாசம எனபேனோ? நான முகக் கடவுள் எனகோ; நளிர் மதி சடையன எனபேனோ? ஒளி மணி வண்ணன் என் பேனோ? எபபடி அழைப பேன் என்று அலதருகின்றார ஆழ்வார். எபபடி அழைததாலும அது இறைவனாகிய ஒருவனையே சென்று அடையும் என்று தெளிவுபடுததுகிறார.

இதனான் எநத நெறியும் இறைவனையடைய வகுதத நெறியே; எஙகும நீக்கமற நிறைநது ஒளிர்பவனும் அவனே. எதுவும் இழிந்தது, உயரநதது என்று கருதலாகாது என்னும் ஆழ்வாரகள திருவுள்ளம் எல்லோர்ககும தெளிவிற் புலனாகும் அன்றோ? சமயச சமரசம் பொலிவுறும் அன்றோ!

மார்கழி வழிபாடு

டாக்டர். என்.எஸ். சுந்தரவதாரம்

திருமால் வழிபாடு பண்டைக்காலம் முதல் தமிழகத்தில் உள்ளது. "மாயோன் மேய காடுறை உலகமும்" என்ற தொல்காப்பியர் சூத்திரம் இதனை வலியுறுத்துகிறது. சிலப்பதிகார ஆச்சியர் குரவையும், பரிபாடலும் திருமால் வழிபாட்டின் தொன்மையைக் காட்டுகின்றன. நாலாயிரதிவ்ய பிரபந்தம், அட்டப்பிரபந்தம் போன்ற பக்தி இலக்கியங்களும் திருமால் பெருமையையும், வழிபாட்டையும் எடுத்துக்காட்டுகிறது.

திருமால் முல்லை நிலத்துக்குரிய கடவுள். அங்கு வாழ்பவர்கள் ஆயர்கள். அவர்கள் வாழ்க்கை, நாகரீகம் முதலியன ஆண்டாளருளிய பாவைப் பாடருந்து இறைவழிபாடாற்றுகின்றனர்.

காலத்தை அறிய அன்று காலங்காட்டும் கருவிகள் இல்லை. வைகறையானது என்பதை விண்மீன்களாலும், மலர்கள் மலர்வதாலும், புட்கள் ஒலி எழுப்புவதாலும் கோயில் வாயிலில் வெண்சங்கம் ஒலிப்பது போன்றவையாலும் உணர்ந்து அறிந்தனர் என்று ஆண்டாள் பாடலால் அறியலாம்.

"புள்ளும் சிலம்பினகாண்
புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம்
கேட்டிலையோ"

"உங்கள் புழக்கடைத் தோட்டத்து
வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து
ஆம்பல்வாய் கூம்பினகாண்"

"வெள்ளி யெழுந்து வியாழமுறங்கிற்று"

என்ற திருப்பாவைப் பாடல்களில் ஆழ்ங்கால படுங்கால் மக்கள் இயற்கை வாழ்க்கையிலேயே ஈடுபட்டு இறைவழிபாடாற்றி இன்பமெய்தினர் என்பது புலனாகிறது.

பண்டைய மக்கள் தன்னலங் கருதாது கூட்டு வழிபாடே விரும்பினர் என்பதை கோதை கருத்தாலுணரலாம்.

"வையத்து வாழ்வீர்காள்" என்று ஆண்டாள் உலக மக்களை அழைப்பது இக்கருத்தையுணர்த்துவதாகும்.

"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்ற வள்ளுவர் வாக்கும் பண்டைக்கால மக்களின் பரந்த மனப்பான்மையை விளக்குவதாகும். நக்கீரனாரும், சேக்கிழாருங்கூட உலகத்தை முன்னிலைப்படுத்தி இறைவனைப் போற்றியுள்ளது தமிழ மக்களின் வழிபாட்டின் பெருமையை விளக்குகிறது.

குளிர்காலத்தில் துறவிகள், வைகறையில் நீராடி மக்கள் நல் வாழ்வு வாழ வழிபாட்டாற்றுவர். புட்கள், மலர்கள் கூட ஒலித்தும், மலர்ந்தும் தங்கள் கடமையைச் செய்கின்றன.

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது". என்ற ஔவையார் வாக்கிற்கிணங்க மானிடராய பிறந்த நாமும் வைகறையில் வழிபாடாற்ற வேண்டும். மக்கள் அதிகாலையில் துயிலெழுந்து வீடு வாசல் முதலியவைகளைத் தூய்மை படுத்துவர். சுண்ணப்பொடிகளைக் கொண்டு கோலமிட்டு அலங்கரிப்பர். பின்பு நீராடித் தூய உள்ளத்துடன் தூமலர் கொண்டு வாயினால் பாடி மனத்தினால் நினைந்து வழிபடுவர் என்பது திருப்பாவை பாடலால் அறியும் உண்மையாகும்.

"தூயோமாய்வந்து நாம் தூமலர்
தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால்
சிந்திக்க"

லில காணலாம். தண்மைப் பொருந்திய குளிர் காலமான மார்கழியில் மக்கள் வைகறையில் துயிலெழுந்து வழிபாடாற்றும் பண்பு அன்றுதொட்டு இன்றுவரையுள்ளது.

ஆடிமுதல மார்கழி வரையில் சூரியனுடைய தட்சிணயனம். அது தேவர்களுக்கு இரவு. நமக்கு அதிகாலை நான்கு மணியிலிருந்து ஆறு மணிவரையில் பிரம்ம முகூர்த்தம். கடவுள் வழிபாட்டிற்கு அது ஏற்றகாலம். அதேபோன்று தேவர்களுடைய நாளில் மார்கழி முழுவதும் பிரம்ம முகூர்த்தம். அதனால் மாதங்களுள் மார்கழி மிகச் சிறந்தது. மார்கழி மாதத்தில் மக்கள் அதிகாலையில் எழுந்தி

சிறப்பொடு பூசனை செய்து வழிபாடாற்றினால் மழைபொழிந்து நாடு நல்வளம் பெறும் எனபது ஆண்டாள் கருத்து. வழிபாடாற்றுவதால நாடுவளம் பெறும எனற உண்மை வள்ளுவர் கருததோடு ஒததுள்ளது உணரற்பாலது.

இறைவழிபாடடால் மாரி பொழிந்து நாடு நகரமும நல வளம பெற்று மக்கள நல் வாழ்வு பெறுவர். அன்று வழிபாடு செவ்வனேயாற்றப் பெறற தால செந்நெல சூழ்ந்த வயல்களும, வள்ளல் பெரும் பசுக்களும், வாரி வழங்கும வள்ளல்களும் நிரம்பிய நாடாகத திகழ்நதது.

பண்டையோர் போறறிய தொன்மையை நாமும போறறி அருள் பல பெறுவோமாக.

என்ற திருப்பாவை பாடல் கருத்து தூய்மையான உள்ளத்தோடு வழிபடும் பாங்கினை உணர்த்துகிறது.

முல்லைநிலக் கடவுளான திருமாலின் பெருமைகள பக்திப்பாடல்களில் காணப்படுகின்றன. நாட்காலையில் நீராடி நெய் பால் முதலிய உண்ணுமலும், மையிடாமலும், மலர் சூடாமலும் தீயனவகளைக் கூறுமலும் இயன்றவரை அறத்தை செய்து பரமனைப் பாடி பரவுவது பண்டைக்கால முறை என்பது கோதை வாக்கால் உணரும உணமையாகும். உத்தமனான இறைவன பெயரைப் பாடி பரவுவோமானால் திங்கள் மும்மாரி பெயது வயல வளம் பெற்று, நீங்காத செலவத்தை நாடு பெறும் என்பது புலனாகிறது.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வரக்குமேல்-வானோர்க்கும் ஈண்டு"

என்பது வள்ளுவர் கருத்து.

விநாயகரின் தியாகம்

விநாயகர் தும்பிகை ஆழ்வார் என அன்புடன் அழைக்கப்படுகிறார். கஜானன் என்ற நித்யசூரியே கணபதி என்ற பெயரில அம்பிகையின புத்திரராக அவதரித்தார.

அண்டமனைத்தும அவர உதரத்தில அடங்கும, காத்தல், மறைத்தல் முதலிய ஐந்து தொழிகள அவராற்றுவன. அவர கைகளில பாசம், அங்குசம, பூ, கொழுக்கட்டை முதலியன வைத்திருப்பார. கஜாசுரன் எனற அசுரனை அவர வதம செய்தார. பெருச்சாளியும் மூஞ்சூறும அவர வாகனங்கள. அவை அவரை மிகவும் எளிதே சுமக்கும வண்ணம சிறுருவை ஏற்றுக்கொள்வார.

பிரம்மபுத்திரர்களான சித்தி, புத்தி எனற இருவரையும அவர மணந்துகொண்டார். வேதவியாசர கூற இவர மஹாபாரதம எழுதினார. இடையில எழுத்தாணி உடைந்துவிடவே தன தந்தங்களில் ஒன்றை உடைத்து அதைக் கொண்டு எழுதினார. என்னே இவர தியாகம்!

திருமதி. ஆர். ராஜலெக்ஷ்மி - திருச்சி

பரகாலனும் அவர்செய்த பனுவல்களும்

திரு. எஸ். விஜயராகவன் - திருப்பதி

ஸ்ரீய. பதியான ஸ்ரீமநநாராயணனாலேயே மயர்வற மதிநலம அருளப்பட்ட ஆழ்வாரகள் பதினமர. அவர்களில கடைசியாகத திருவவதரிததவர திருமங்கையாழ்வார. காரததிகை மாதததில் காரததிகை நக்ஷததிரததில திருககுறையலூரில் இறைகைச் சுமார ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுககு முனபு அவதரிததார. ஆழ்வார்கள் வரிசையில் கடைசியாகத் தோனறியபடியால் இவரைக் “கடைககுட்டி” எனபர. இவருடைய பெருமை சொலலிலடஙகாது. சக்திக்கேற்ப இங்கு அநுபவிப்போம.

நான்காம வரணத்தில உயரநத வைஷ்ணவகுலததில் இவர் தோன்றினார. “என தாதை தாதை அபபாலெ மூவர பழவடிமை வநதார” எனறு தம திருக்குலபபெருமையைத தாமே பேசுகிறார. “சிறியேன பாலகனாய்ப பல தீமைகள செய்துமிடடேன” “கொன்றேன பல்லுயிரைக குறிககோள ஒனறிலலாமையினால்” எனறு நைநதுகொளளுமபடி இவருடைய இளமைப்பருவம கழிநதது. தமது பராக்ரமத்தினால சிற்றரசரானார. கேவலம ஸதரீ லோலராய்த திரிநத இவரைத திருததுவதறகாகத திருமாமாகள எனற அபஸரஸ ஸ்தரீ, திருநாஙகூரில அயோநிஜையாயப பிறநது ஒரு வைதயர திருமாளிகையில வளரநது வநதாள.

அவளது ஒபபற்ற அழகைப பறறிக கேளவிப்பட்டு அவளையே மணம்புணர விரும்பினார. அவளது நிபந்தனைககுககுக கட்டுப்பட்டார். திருநறையூர் நமபியிடததிலே, ஸமாச்ரயணம் பெறறுக்கொண்டு, பன்னிரண்டு திருநாமஙகளோடும் சிறந்தவைஷ்ணவ வேஷததோடும திருநாங்கூர் திரும்பினார. அபபெண்ணும் மிக வுகநது, ஒரு வருஷகாலம் தினநதோறும் ஆயிரத்தெட்டு ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத ததீயாராதநம் செய்விதது, ஸ்ரீபாத தீரததம, போனகம் செய்த சேடம ஸவீகரிக்க வேணுமெனறு நீரப்பநதிகக, இவரும இசைந்து, அப் பெண்பிள்ளையை விவாஹம செயது கொணடார். இதறகாகக் திருப்பாரததன்பளளியருகே வாழைததோட்டம போடப்படடது. இந்த இடம் “இலையமுது கூடம” என்று இன்றும வழஙகபபடுகிறது. பெருந தோடடம எனற இடத்தில் காய்கறிகள் விளைவிக்கப்பட்டன. மஙகைமடம என்ற நரஸிம் மக்ஷேத்ரததில நித்யததீயாராதநம துவஙகியது.

காலக்ரமததில கையிலிருநத தனம் முழுவதும் தீரந்து விடவே, வழிப்பறி செயதாவது ததீயாராதநததைத தொடர எண்ணினார. தமது ஒப்பறற சீடரகளுடன வழிபபறியில இழிநதார. தனககு மிகவும அநுகூலமான தருணம் இதுவே எனறு திருவுள்ளம் பற்றினான் எம்பெருமான.

பிராட்டியும தானுமாக, ஸரவாபரண பூஷிதரகளாய்த திருக் கல்யாண வேஷததிலே பங்குனிமாதம் உத்திர நக்ஷத்திரத்தன்று நள்ளிரவில் திருமங்கை மன்னனின் கண்ணுக்கிலக்கானார். “பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங் காதும சோராமே ஆள்கின்ற” “செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார் ஓர் அரசு ‘வார ணங்குமுலை மடவார் மங்கை வேந்தன்’ ஓர் அரசு. இவ் விரு அரசும் ஒரு அரசமரத்தடியிலே சந்தித்தபோது திருஅவதரிததது மந்திரங்களுக்கெல்லாம் அரசான திருஎட்டெழுதது. ‘வேதராஜபுரம்’ ‘திருமணங்கொல்லை’ என்று அழைக்கப்படும் இந்த இடத்தைத் ‘திருமந்திரம் விளைநத இடம்’ என்று பெரியோர் கொண்டாடுவர்.

பொன்னும் பொருளும் கொடுதது மநதிரம் கொள்வாருண்டு. பிற்றை நிலை முனியாது, குருவின அருள்நோக்கித் தொண்டு பூண்டு மந்திரம் பெறுவாருண்டு. மாஸோபவாஸம செய்து, சூளுரைத்து மந்திரம் வேட்டாருமுண்டு. ஆனால் இங்கே, வெட்டும் கலியன் வெருட்டி நெடுமாலை எடடெழுததும் பறிததனர். திட்டமிட்டபடி வழிப்பறி நடந்தது. ஆனால உண்மையில் பறித்தவர் யார்? பறி கொடுததவன் யார்? பறி போனது எது? என்று பார்ததால, எலலாம் எம்பெருமானுடைய ஸங்கலப ப்ரகாரமே என்று தெரியவரும். “கள்வன் கொல் யானறியேன்” என்கிறபடியே, களவு கொண்டவன் உள்ளம் கவர் கள்வனான அழகிய

மணவாளன். களவு போனது திருமங்கைமன்னனின திருவுள ளம.

மஙகைநாடடரசர திருமஙகை ஆழவாரானார. ' பெருமான இவவாறு ஆழவாரககு ஞானப் ரதாநம பணணின உடனே, ஆழவாரும் "வாடினேன வாடி வருநதினேன" எனறு தொடங கிப பாசுரம பாடினார. தமககு திவ்ய ஜ்ஞாநம் பிறநதமை பற்றியும திருவெட்டெழுததின பெருமை பறறியும பரகக உப தேசம் செயயலானார. எமபெருமானும் "இனனின்ன ஸதல விசேஷஙகளில உமககு ஸேவை ஸாதிககிறோம" எனறு திருவாயமலரந்தருளி மறைந்தான

திருமஙகைஆழவார மறறைய ஆழ்வாரகளுக்கொபபானவர்; அவரகளை விஞசி நிறபவரும கூட. இவரககுப பலவிதஙக ளில தனிசசிறப்புணடு. இவர எமபெருமானால் விஷயீகரிக கபபட்ட விதமே அஸாதார ணம. 'ஆசுகவி', 'மதுர கவி', 'சிதரகவி', 'விஸதாரகவி' என்று நான்கு வகைபபட்ட கவி களின பரகாரமும இவரொருவ ரிடததிலே காணலாம 'நாலுக விப பெருமாள்' 'சதுஷகவி ப்ர தாந:' என்றெல்லாம் போறறப படுகிறுர. இவர மஙகளாசா ஸநம செய்த திவய தேசஙக ளின் எணணிககை இவருககு இன்னொரு தனிசசிறபபைத தருகிறது. தாம மஙகளாசா ஸநம் செய்த திவயதேசஙகள ளைததிறகும் நேரில் சென்ற பெருமை இவருககே தகும. மணவாளமாமுனிகள வடிவழகு அருளிசசெய்தது ஆழ்வாரக ளில இவரொருவரககே. 'நமபி' எனற சொலலுக்குப் 'பூரணன்' 'நிறைவு பெறறவன்' எனறு பொருள. அநத நமபியிடமும ஒரு குறையை வைதது மடலெ டுததவர் இவர்.

நம்மாழவார அருளிய பிரபந் தஙகள நான்கும நான்கு வேதங களின ஸாரமானவை. அவற் றிறகு ஆறு அங்கமாயமைந தவையே திருமங்கைஆழவார அருளிய பெரிய திருமொழி, திருககுறுநதாண்டகம், திருநெ டுந்தாணடகம், திருவெழுகூறறி ருககை, சிறிய திருமடல, பெரிய திருமடல எனகிற ஆறு திவ்யப ரபந்தஙகளும். "மாறன பணிதத தமிழ் மறைககு மஙகையர கோன், ஆறஙகம கூற அவத ரிதத" எனறு மணவாளமாமுனி கள நிரவாஹம.

கணணன திருவாயபபாடி யில பிறநததுமே முதலாகச செய்த கிரீடைகளை அவ னது பெற்றேர்களும உறறூர களும ஒவவொரு பருவமாக எப்படி அநுபவிததாரகள என பதைப் 'பிளளைத தமிழ' எனகிற ரீதியில பெரியாழ் வார் பாடியருளினார. அதே ரீதியில திருமங்கை ஆழவா ரும கணணனுடைய பால லீலைகளைச் 'சந்தமலரக்குழல தாழ' (அமமம் உணண அழைத தல), 'பூஙகோதை ஆய்சசி' (சப பாணிப பருவம), 'எஙகானும ஈதொபபதோர மாயம் உணடே' (வெண்ணெயுண்டு உரலில கட டுணடு இருநதமை), 'மானமு டைத்து' (அதிமாநுஷ சேஷ்டி தஙகள்), 'காதில் கடிபபிடடு' (ஆயச்சியர ஊடல) எனகிற பதி கஙகளில் அநுபவிததிருககிறுர்.

கணணனைப் பிரிநத சில கோபியர அவனைத தேடிக கொணடு சென்று "எஙகள கண ணனை நீஙகள இங்கே வரக கணடீரோ?" எனறு சிலரை வினவ, அவரகளும் கணணன் அழகைப பரகக வர்ணிதது, "விருநதாவனததே கணடோமே" எனறு விடையளிக்கும க்ரமத தில் "பட்டி மேயந்து" என்று தொடஙகிப பததுப பாசுரங் கள பாடியருளினார ஆண் டாள. அவவாறே, சில கருஷ்ண பகதரகள கருஷணனைக குறை கூறுவது போல பாட, அதெல லாம அவனுககு உயரவைக் கொடுபபதே எனறு வேறு சிலர் மொழிவது போல அமைநதுள ளது "மானமரும மெனனோக்கி" என்கிற பதிகம.

தமமுடைய அநநயார்ஹ சேஷதவத்தையும், அநநயோபா யதவததையும் விளககும வகை யில பாசுரநதோறும ஒரு அறபு தமான உவமையைக காட்டியரு ளுகிறுர "தருதுயரம தடாயேல" எனகிற பதிகததில ஸ்ரீகுலசே கராழ்வார. அதே போல், இநத ஸமஸார வாழ்க் கையில் நிலையினமையையும், அதில தமககேறபடட வெறுப் பையும ஒவவொரு பாசுரத திலும் ஒபபறற உவமையின் வாயிலாக வெளியிடடருளுகிறுர "மாறறமுள" எனகிற பதிகததில திருமஙகை ஆழ்வார்.

திருவிலலாத தேவரும, பொல லாத தேவருமான தைவாபா ஸஙகளை விடுதது, 'ஸ்ரீமந்நா ராயணனே பரததவம' என்று நிரூபிப்பதில முனனிறபவரான திருமழிசைஆழவாருககு 'உறை யிலிடாதவர' எனற திருநாமம் ஏறபடடது. பரஸமயிகளை வாதில வென்று ஒருவேலைப பரிசாகப பெறற திருமஙகை ஆழவாரோ அவரையும் விஞசி நிறபவர. ப்ரளய காலததில எமபெருமான, தேவரகள, மநுஷ யரகள், தெயவஙகள எனகிற வேறுபாடினறி அனைவரையும தன வயிறறில வைதது ரக்ஷித தமையால, இப்போது "நானே தெய்வம்" எனறு பறை சாறறும் க்ஷுதரதெயவஙகளை "எமபெ ருமான உண்டுமிழநத எசசில் தேவர்" என்று வர்ணிக்கிறுர்.

பாஹயமதங்களைப் புலைய றமென்று நிந்தித்து ஸ்ரீமந நாராயணனைத் தெய்வமாகக கொண்ட ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப ரதாயமே எலலாச்சமயங்களி லும் உயரநததெனறு நிரு பிதது அடியாரகளுககு அடி மைபபட்டிருபபதே எமபெருமா னுக்கு அடிமையாயிருபபதன எலலைநிலம எனறு தம்மு டைய "திருமாலை"யில் அரு ளியிருககிறார ஸ்ரீதொண்டரடிப பொடியாழவார. இதை அடி யொற்றியே திருமங்கை ஆழ வாரும "தருக்கினால சமண செய்து சோறு தண தயிரி னால திரளை, மிடறறிடைநெ ருக்குவார் அலக்கண", "பொங்கு போதியும பிணடியுமுடைய புததர நோனபியர", "துவரி யாடையர மடடையர சமண தொண்டரகள" எனறெலலாம வேதபாஹயரகளை கரஹிதது, "கடலமலலைத தலசயனம நச சித்தொழுவாரை நசசெனறன நனனெஞ்சே". முதலான பாசு ரங்களில பரமபாகவதரகளுக குத தாம அடிமை பூணடிருபப தைக காட்டுகிறார. "சுருமபமர சோலை சூழநத அரஙகமா கோயில் கொணட, கரும்பினைக கணடு கொணடென கண ணினை களிககுமாறே" எனகிற அடிகள திருமாலையிலும திருக குறுநதாணடகத்திலும காணப படுவதால இவர தொண்டரடிப பொடிகளின வழியே செலபவர் என்பது திணணம

பாதாதி கேசாநதமாகத திரு அரஙகனை அநுபவித்த திருப் பாணாழவாரைப போலே, இவ ரும "திரிபுரம மூனறெரிததா னும" "சிலையிலஙகு பொன னாழி" முதலான பதிகஙக ளிலும, பெரிய திருமடலி லும, திருநெடுநதாணடகததி லும எமபெருமானுடைய திரு மேனியழகை அநுபவிததுப்பா டியுள்ளார.

அயோநிஜர்களாய் ஓடித்திரி யும் யோகிகளான முதலாழ்வார் களுககுத் திருககோவலூரில் ஒரு வீட்டின இடைகழியில எம் பெருமான் ஸேவைஸாதித்தான். அவரகள அப்போது துவங் கிப்பாடிய திவ்யபரபந்தஙகளே மூன்று திருஅநதாதிகள். எம பெருமானுடைய அவதாரவைப வஙகள. திவ்ய தேச வைபவங் கள இவறறில் ஈடுபட்டமுதலாழ வாரகள எமபெருமானை அடை யும வழியைப பறறிக் கூறும் போது, "இமையாத கணணால் இருள அகல நோக்கி, அமை யாப பொறி புலனகள ஐநதும் நமையாமல, ஆகததணைப்பார் அனைவரே" எனறும, 'அறிந தைததும உளளடககி ஆய் மலர கொணடு, ஆரவம செறிநத மனததராயச செவ்வே, அறிநதவனதன் பேரோதியேத தும பெருநதவததோர காண பரே" எனறும, "அறிவென்னும தாள கொளுவி ஐமபுலனும தம மில, செறிவென்னும் திண்க தவம ' செமமி, மறையென னும நனகோதி நனகுணர்வார காணபரே" எனறும அறிவுறுத திப போநதாரகள அதே வழி யில நம கலியனும "இளைப பினை இயக்கம நீக்கி" என கிற திருககுறுந்தாணடகப பாசு ரததில் மெய்ம்மையைக காணும மாரககததைக காட்டியுள்ளார்.

ஆழவாரகளில பரதாநரான நமமாழவாரை அநுஸரிதத பர காரம அளவிறநதது. தாமான தனமையோடலலாமல, தோழி, தாயார, மகள எனகிற பாவனை களில இவவிரு ஆழ்வாரகளும பாடியுள்ளனர். திருமஙகைஆழ வார இவைதவிர, ராக்ஷஸ பாவ னையில "இரககமினறி", "ஏதது கினறோம" என்று இரு பதிகங்க ளில இராவணவதததிறகுப பின் தோறற அரக்கரகள, இராம பிரானைச் சரணடைந்து துதி பாடுவது போல அருளிசசெய் துள்ளார். புணர்வில் இன்புறு வது, பிரிவில் தளர்வது, தம்மை நோவது, அவனை ஏசுவது, தூது விடுவது, ஊடல், உப தேசம இவையெல்லாமும் நம் மாழ்வாரின் பிரபந்தங்களிற் போலவே, திருமங்கை ஆழ்வா ரின பிரபந்தங்களிலும் காண லாம. எம்பெருமான் ஸேவை ஸாதிக்காதபோது, "யாம் மட லூர்துமே" என்ற நம்மாழவா ரின் ஸங்கல்பத்தைக குறை வற அநுஷ்டித்தார் இருதிரு மடலகளிலும் திருமங்கைஆழ் வார். "முலையோ முழு முற்றும் போந்தில" என்கிற திருவிருத்தப்பாசுரம பராங்குஸ நாயகியின இளமையை வர் ணிக்கிறது. பெண்குழந்தைக குத் தாயமார் சிற்றாடையை அரையில் அணிவித்தார்க ளாம. ஆனால அந்தப பெணணோ, தன் தாயைப்போல ஆடை அணிய வேண் டுமெனறெண்ணி, அதைத தோளில் இழுத்துபபோட்டுக் கொணடாளாம. தன் அரை யில ஆடையிலலாதது குறித தும நாணம கொள்ளாத சிறு பருவம, ஆனால இசசிறு பிராயத்திலேயே "திருவேங்கடம எமபெருமான எழுநதருளியுள்ள திருபபதி" எனறு கறறுவிட் டாளே! இது பராஙகுச நாயகி யின நிலை. ஆனால் பரகால நாயகியின இளமையோ "முள் எயிறு ஏயநதில" - வாயில பல் முளைப்பதன் சுவடுகூடத்தெரிய விலலை. இந்த இளம் பருவத் தில் கணபுரம் கைதொழ ஆரம் பிததுவிட்டாள்!

"பயிலும சுடரொளி", "நெடு மாறகடிமை" எனகிற திருவாய் மொழிகளில் பாகவத சேஷத் வததை நம்மாழ்வார அநுபவித் ததுபோல, "நண்ணாத வாளவு ணர", "கண்சோர வெங்குருதி வநதிழிய" என்கிற திருமொ ழிகளில திருமங்கைஆழ்வாரும்

பரக்க அநுபவிததிருக்கிறூர். வகுதத விஷயமான ஸ்ரீமநநாராயணனை விடுதது, வேறு தெயவங்களைப பேணுதல ஈன்றோள இருகக மணை வெநநீராட்டுவது போனறதெனறூர நமமாழ்வார. இதையடியொற றியே "பெறறதாயிருகக மணை வெநநீராடடுதிரோ" எனறூர திருமஙகை ஆழவார.

நமமாழவார தமது உபதேச மாரககததாலே திருதத முறபடுவது அறிநதவர, அறியாதவர எனனும வேறு பாடிலலாமல அனைவரையுமே இநத கோஷ்டியில ஸரவஜஞனும அடக்கம "உனக்கொனறு உணரததுவன", "உனககேலும பிழை பிழையே" எனபார திருமஙகை ஆழவாரும "நினதனககும குறிபபாகில கறகலாம கவியின பொருளதானே" என்றூர.

தன் தாயைபபிரிதது தலைவனுடன சென்ற பராங குச நாயகி திணணமாகத திருககோளூரககே சென்றிருப பாள என்று தாயார பாசுரம. ஆனால தாயமனம நினறிரங கத் தனியே நெடுமால் துணையாயப போயின பரகாலநாயகி தலைவனுடன் கூடியதாலுண டான மதிமயககததால, திருவாலியில் புகுநதார்களோ அலலது லங்காதவாரம் புகுநதாரகளோ என்று தாய பதறுமபடியாயிருநதது திருமஙகைமனனனின் அநுபவம். இவவாறு இவவிரு ஆழ்வாரகளின ஒபபுமை பேசப புகில கட்டுரை பெருகும்.

திருமஙகை ஆழவாருடைய திருநாவீறறைப பறறிச சிறிது அநுபவிப்போம. திருநெடுந தாணடகம எனனும முப்பது பாசுரஙகள கொணட பிரபநதமானது வயாகரணம, தரககம போல ஒரு தனிதத சாஸ்தரம். இதை வைததுககொண்டே ஸ்ரீபராசரபட்டர் வேதாநதி என்ற பணடிதரை வென்று நஞசீயராககினார எனபது சரித்திரம. திருவெழுகூறறிருககை எனனும திவய பரபநதம "ரத பநதம" என்ற ரீதியில அமைந்தது. அதாவது ஒருதேர அடியில் சிறுததுச சிறிது சிறிதாக வடிவம மேலே பருதது போவது போல, ஒனறு, இரணடு முதலிய எணகளை வைதது விசிததிரமாகப பாடப பெறறுளளது.

எமபெருமான தனககு ஸேவை ஸாதிக்காததால தமிழ மரபையொட்டி அவன மேல மடலூரநது பாடியவையே இரு திருமடலகளும. எமபெருமாளை வரணிககபபுக் கவர மனனர திருமாரபும, வாயும, அடியிணையும பனனு கரதலமும, கணகளும எனறெல லாம பாடினார. ஆனால திருத தாயாரின திரு அவயவஙகளை இபபடி வெளிபபடையாக வரணிபபது தகாதென்று திருவுள ளமபறறி, அநதநத அவயவஙகளின உபமானஙகளை மட்டும "மினனாய, இளவேய இரணடாய, இணைசசெபபாய, முனனாய தொணடையாய, கெணடைக் குலமிரணடாய" என்று வருணிதத அழகு அநதோ!

பெரிய திருமொழி என்பது ஒரு பெரிய கடல இதில சொல லாட்சி, பொருளாழம, ஓசை நயம், கற்பனைததிறம, முதிரநத பகதியின கனம யாவும அநுபவிககத தககவை. "அரிய இனனிசை" "விழுமிய இசை" எனறெலலாம தாமே கூறுகிறூர. பல பதிகஙகள இசை நயததாலேயே நமமை ஈரககினறன. உவமையணியைக கையாளவதில இவருக்கு நிகர இவரே எனலாம எமபெருமான கடல போனறவர என்று பேசப புகுநது நானகுவிதமாகக கடலோடு ஸாமயம காட்டுகிறூர. "நீணட மலைகளும, மாமணியும, மலரமேலமஙகையும, சஙகமும தஙகுகினற அலைகடல போன்று இவர" எனகிறூர

திருஇநதளூர என்ற திவய தேசததில பணிசெயய விருமபிய ஆழவாருககு வாய்பபுககிட்டவிலலை. ஆழவார தாமான நிலைமையிலேயே பெருமானுடன ஊடல புரிகிறூர. பெரியோரகள பேசசைபபோலவே ஏசசும ரஸிக்கக்கூடியதாயமையும இழிநத சொறகளைக கூறுமல, தகுதிககு மீறின கௌரவததைத தருவது என பது நிநதையில ஒருவகை மறறைய ஆழவாரகளுடன ஊடல. கூடல இவறறில ஒரேமாதிரி

தெய்வங்களும் கொன்ற அசுரர்களும்

அமபாள	-	மகிஷாசுரன
சிவபெருமான	-	திரிபுர அசுரரகள
விநாயகர	-	கஜமுகாசுரன
சுபரமணியர	-	தாரகாசுரன
		சூரபதமன
ஐயபபன	-	மகிஷி
சரஸவதி	-	சுமப, நிசும்பர

திருமதி. ஆர். ராஜலெக்ஷ்மி - திருச்சி.

வாராந்திர சேவைகள் மற்றும் உத்ஸவங்கள்

1) சிறப்பு பூஜை	(திஙகடகிழமைகளில) ரூ. 3000/- காலை 6-00 மணிககு. 5 நபரகள அனுமதிககப்படுவர். அனபளிபபு : வஸ்தரம், 5 பெரிய லட்டுகள், 5 வடைகள.
